
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | பெப்ருவரி 1988 | இதழ் 2

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

# THIRUMARAI AASAAN

Editor:
J. C. CHOATE

Managing Editor:
E. Z. SELVANAYAGAM

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 1 February 1988 Issue 2


**இந்த இதழின் உள்ளே :**


ஜெபத்தைப் பற்றி சிலசிந்தனைகள் 1

திருமுகத்தைக் காட்டி விடு 6

கனி கொடுங்கள் 7

சபை வளர்ச்சியில் பெண்களின் பங்கு 11

கிறிஸ்தவர்களே, உஷார் 16

ஜென்ம பாவம் 19

புதிய ஏற்பாட்டு ஞான ஸ்நானம் 25

நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் 27




# ஜெபத்தைப்பற்றி சில சிந்தனைகள்

கிறிஸ்தவ மக்களின் மிகப் பெரிய ஆசீர்வாதங்களில் ஜெபமும் ஒன்று. தேவனைப் பிதாவே என்று அழைத்து அவரிடத்தில் ஒத்தாசை பெற—மன்றாடும் உரிமை அவர்களுக்கு மட்டுமே உண்டு. உலகத்தில் உள்ள அனைத்து மாந்தர்களுடைய ஜெபத்துக்கும் தேவன் செவி கொடுத்துப் பதில் அளிப்பதாக இருந்தால் ஒருவன் கிறிஸ்தவனாகி இருக்கவேண்டிய அவசியமே இராதே! ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் முன்பு தனக்காகவும், தான் நேசிக்கிற மற்றவர்களுக்காகவும் மன்றாடினால் பலன் இராது. தேவன் எல்லாரையும் படைத்தார் என்பது உண்மையே. தகப்பன் - பிள்ளை, உறவு, பாவம் நீங்கி சுத்திகரிப்படைந்தவர்களுக்குத்தான். யோவான் 8:44-ன்படி இயேசு சிலரைப் பிசாசின் பிள்ளைகள் என்றும் பிசாசு அவர்கள் தகப்பன் என்றும் குறிப்பிடுகிறார். ஏனெனில் அவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய உபதேசங்களுக்குச் செவிகொடுக்க மறுத்தார்கள்.

இன்னும் சிலபேர் நாங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோமே. ஆகவே நாங்கள் தேவனுடைய பிள்ளைகள்தான் என்று வாதிடுவர். ஆனால் செயல்படாத வெறும் விசுவாசத்தோடு நிறுத்திக்கொண்டால் தேவனுடைய பிள்ளைகளுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியை ஒருவன் பெற்றுக் கொள்ள முடியாது. பிசாசுகளும்கூடத்தான் பயந்து நடுங்குகின்றன. யாக் 2:19 அப்போஸ்தலர் நடபடிகள் எட்டாம் அதிகாரத்தில் நாம் பார்க்கிற அந்த எத்தியோப்பியா மந்திரி வசனத்தைக்கேட்டு விசுவாசித்த பொழுதல்ல, சுவிசேஷத்துக்குக் கீழ்படிந்து திருமுழுக்குப் பெற்றுக் கொண்ட பிறகே மகிழ்ச்சியோடு தன்வழியே போனான் என்று வாசிக்கிறோம் அப். 8:39 ஆகவே கிரியை செய்கிற விசுவாசமுள்ள கிறிஸ்தவனுடைய ஜெபமே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நாம் முதலாவதாக அறிய வேண்டும்.

தேவனோடு ஜெபத்தில் தொடர்புகொள்ள விரும்புகிற ஒருவன் கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்தமான வாழ்க்கையில் உறுதியாக நிலைத்திருக்கவேண்டும். ஒருவன் தெரிந்தும் தொடர்ந்து பாவம் செய்வானானால் அந்தப் பாவம் தேவனுக்கும் அவனுக்கும் பிரிவினையை உண்டாக்கி தேவனோடு தொடர்புகொள்வதை இயலாததாக்கி விடும்.

ஏசாயா தீர்க்கதரிசி இதைப்பற்றிக் கூறுவதை கேளுங்கள். "இதோ இரட்சிக்கப்படாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை. கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது." ஏசாயா 59:2

புதிய ஏற்பாட்டில் யாக்கோபு கூட "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாக இருக்கிறது" என்கிறார் யாக் 5:16. அப்படியானால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக அவருக்குப் பிரியமான வாழ்க்கை நடத்தினால், நம்முடைய ஜெபத்தைக் கேட்பதுமட்டுமல்ல அவருடைய சித்தத்தின்படி கேட்டால் நம்முடைய மன்றாட்டுகளைக் கேட்டு உதவுவராகவும் இருக்கிறார். 1 யோவான் 5:14, 15. இந்த வசனங்களில் நம்முடைய ஜெபத்தை தேவன் கேட்பதற்குள்ள நிபந்தனை "அவருடைய சித்தத்தின்படி கேட்டல்" என்று பார்க்கிறோம்.

ஏற்கனவே நாம் பார்த்தவண்ணம் அவர் நமக்குப் பிதா; நாம் அவருடைய பிள்ளைகள். உலகப் பிரகாரமாக தந்தைமார் தங்களுடைய பிள்ளைகளுக்குச் செவி கொடுக்கிறார்கள். ஆனால் பிள்ளைகள் கேட்கிற எல்லாவற்றையுமே கொடுத்து விடுவதில்லை. பெற்றோர்கள் தங்கள் சக்திக்குட்பட்டு, முடிந்தவரை செய்கிறோம். சில வேளைகளில் அவர்கள் கேட்கிற காரியங்கள் அவர்களுக்கு நன்மை தராது என்று தெரியும்போது பெற்றோர்களுக்கு முடியும் என்றாலும் அவற்றை நாம் கொடுப்பதில்லை. பல வகையில் குறைவுள்ள நாமே அப்படி அன்புடனும், விவேகத்துடனும் நடந்துகொள்ளும் போது எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த பரமபிதா தம்முடைய ஆவிற்குரிய பிள்ளைகளோடு அவ்வாறு அன்புடனும், விவேகத்துடனும் நடந்துகொள்வார் என்பது எவ்வளவு நிச்சயம்! மத் 7;11.

தேவனுக்கு எதையும் செய்யக் கூடிய வல்லமையுண்டு. லூக் 1:37 ஆனால் நாம் விரும்புகிற எல்லாவற்றையும் செய்து விடமாட்டார். நம்முடைய ஜெப விண்ணப்பங்கள் அவருடைய சித்தத்துக்கு இசைவாயிருந்து நமக்கு அதனால் பயன் உண்டாகும் என்று அவர் நினைத்தால் நிச்சயமாய் அவர் செய்வார்; சந்தேகம் வேண்டாம். ஆனால் அவருக்குச் சித்தமில்லாததைக் நாம் கேட்டால் அல்லது கேட்கிற காரியம் நமக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பயன் தராது என்று கண்டால் அவர் அதைத் தரமாட்டார். உதாரணமாக ஒரு சின்னக் குழந்தைக் கத்தி அல்லது தேள் ஒன்றைக் கேட்பதாக வைத்துக் கொள்ளுவோம். எந்த ஞானமுள்ள தகப்பனாவது அந்தக் குழந்தையைத் திருப்திப் படுத்துவதற்காக அவைகளைக் கொடுப்பானா?

அதேபோல் நாம் மன்றாடிக் கேட்கிற காரியம் நமக்கு நன்மை தராது. மாறாக நமக்குத் துன்பத்தையும் அழிவையும் தான் தரும். என்று கண்டால் அவர் நம்மை நேசிக்கிறபடியால் தான் அதைத் தரமறுக்கிறார் என்று நம்பவேண்டும். இது ஒரு கசப்பான உண்மை. ஜீரணிப்பதற்கு சிரமம். இருந்தாலும் அவர் எப்போதும் நமக்கு நன்மையே செய்வார் என்று விசுவாசித்து அவருடைய தீர்மானம் சிறந்தது என்று மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ரோமர் 8:28

சில வேளைகளில் நமக்கு ஒரு வேலை வேண்டும் அல்லது ஆரோக்கியம் வேண்டும் என்றோ அல்லது வேறேசில காரியங்களையோ குறித்துக் கேட்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்த மன்றாட்டுகளுக்குரிய பதில் கிடைக்க வில்லையென்றால் உடனே நாம் சோர்ந்து போய் தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்க வில்லையென்றோ அல்லது ஜெபிப்பதினால் எவ்விதமான நன்மை இல்லை என்றோ கருதி விடக்கூடாது. ஒருவேளை நாம் விரும்பிய அந்தக் குறிப்பிட்ட வேலை கிடைத்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அந்த சமயத்திற்கு அது சற்று மகிழ்ச்சியைத் தரலாம். அதன் முடிவு எப்படி இருக்குமோ? அந்த வேலை கிடைத்து விட்டதால் அந்த விட வேறொரு நல்ல வேலை கிடைக்கும் வாய்ப்பு அதனால் பாதிக்கப்படலாமோ? அல்லது அந்த வேலை பிற்காலத்தில் நம்முடைய ஆரோக்கியத்தைப் பாதிப்பதாகவோ அல்லது நம்முடைய மனநிம்மதியைக் குலைப்பதாகவோ குடும்பத்தில் சண்டை சச்சரவுகளை உருவாக்கக் கூடியதாகவுமோ கூட இருக்கலாம். நமக்கு எப்படித் தெரியும்? ஏனெனில் அடுத்த நாள் அடுத்த விநாடி என்ன நடக்கும் என்பதையெல்லாம் அறிந்துக் கொள்ளக் கூடிய ஞானம் நமக்கு இல்லையே.

இன்னும் ஒரு சாரார் இருக்கிறார்கள் அவர்கள் நாம் தான் எல்லாவற்றையும் ஜெபத்தில் ஆண்டவருடைய பாதத்தில் வைத்து விட்டோமே என்று எண்ணிக்கொண்டு, நாம் எடுக்க வேண்டிய சில பல முயற்சிகளை எடுக்காமல் குருட்டுத் தனமாக பிடிவாதம் பிடிப்பர். அதுவும் தவறு. சில காரியங்களை தேவன் தான் செய்ய முடியும். என்பது உண்மை. ஆனால் சில காரியங்களுக்கு மனித முயற்சியும் தேவை. லாசரு உயிரோடு எழுப்பப் பட்ட சம்பவத்தைப் பார்ப்போம். லாசருவை உயிரோடு எழுப்பக் கூடிய வல்லமையுள்ள ஆண்டவர் சுற்றிலும் நின்று கொண்டிருந்த மக்களைப் பார்த்து "கல்லை எடுத்துப் போடுங்கள்" என்றார். லாசருவை உயிரோடு எழுப்பக்கூடிய வல்லமை படைத்தவருக்கு அந்தக் கல்லைப் பார்த்து 'புரண்டு போய் வழிவிடு' என்று உத்தரவிட முடியாதா? ஆனால் மனிதனுடைய முயற்சியும் தேவனுடைய சித்தமும் இணைந்து செல்ல வேண்டும். என்பது கர்த்தருடைய சித்தம் நாம் நல்ல ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று ஜெபித்துவிட்டு நம்முடைய ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கும் உணவுப் பழக்கங்கள், மது, லாகிரி, வஸ்துக்கள்

இன்னும் உடம்பைக் கெடுக்கும் என்னென்ன கெட்ட பழக்கங்கள் உண்டோ அத்தனையையும் தொடர்ந்து செய்து கொண்டு வருவோம் ஆனால் கடவுள் ஆரோக்கியத்தைத் தருவது எப்படி?

ஜெபத்தைப் பற்றித் தவறாகப் புரிந்துக் கொண்டிருக்கும் இன்னொரு சாராரைக் கூட பார்ப்போம். நம்முடைய சிந்தனைக்கு எட்டக் கூடியதும் இதுதான் சாத்தியமாகும் வாய்ப்புஉள்ளது என்று நமக்கு இருக்கிற சிற்றறிவுக்கு எட்டிய அளவு தீர்மானித்துக் கொள்வதும் ஜெபத்தைப் பொறுத்த வரையில் பிசகாகும். நாம் அவரால் படைக்கப்பட்ட மானிடர்கள் தானே. நம்முடைய கற்பனா சக்திக்குள் தேவனுடைய அனந்த ஞானத்தையும், வல்லமையையும் அடைந்து விட முயலகூடாது. சாராள் கூட தேவதூதன் சொன்ன காரியங்களை நம்பாமல் சந்தேகித்து நகைத்தற்கு இது தான் அடிப்படை. ஆதி 18: 10-12

புதிய ஏற்பாட்டில் கூட அப்போஸ்தலன் பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தான். சபையார் அவனுடையவிடுதலையை விரும்பி ஊக்கத்தோடு ஜெபிக்கிறார்கள். என்ன ஆச்சரியம்! ஜெபம் முடிவதற்குள்ளாக பேதுரு தேவதூதன் ஒருவரால் விடுதலையாக்கப்பட்டு நேராக ஜெபம் நடந்து கொண்டிருக்கிற மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினான். யாருமே நம்பவில்லை ஆனால் நடந்தது உண்மை. அப் 12:1-16. நம்புவதற்கு எதிரான சூழ்நிலைகளில் காரியங்களை நடப்பிப்பது தானே தேவனுக்குச் சிறப்பு.

இதுபோன்று நாம் நம்பவே முடியாத சூழ்நிலையில் அவருக்குச் சித்தமான முறையில் நம்மை வழிநடத்துவார்; ஆறுதல் அளிப்பார் அபாயங்களிலிருந்து காப்பாற்றுவார். ஒருசில வேலைகளில் நாம் மிகவும் நம்பிக்கையாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற காரியங்கள் நடக்காமற்போய் ஏமாற்றங்கள் உண்டாகலாம். எது நடந்தாலும் எல்லாம் தேவனுடைய சித்தமே என்று நம்பி ஏற்றுக்கொள்வது தான் விசுவாச வாழ்க்கை.

ஒரு கிறிஸ்தவன் எத்தனை முறை ஜெபிக்கவேண்டும்? என்பதற்கு ஒரு எல்லைக்கோடு கிடையாது. ஒரு காரியத்திற்காக பலமுறை ஜெபித்தாலும் தவறில்லை. சோர்ந்து போகாமல் ஜெபம் செய்ய வேண்டும் என்ற கருத்தை நம் உள்ளத்தில் நிறுத்த இயேசு சொன்ன ஒரு உவமையை லூக்கா 18-ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கலாம். தேவனுக்குப் பயப்படாதவனும், மனிதரை மதியாதவனும் ஆகிய ஒரு நீதிபதி. அதே நகரில் ஒரு ஏழை விதவையும் இருந்தாள். ஒரு வழக்கு சம்பந்தமாக அவள் பலமுறை அவனிடத்தில் வந்துபோய்க் கொண்டிருந்தாள். அவனோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் காலக்குப்

போக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். அவள் சலிக்காமல் நடந்து கொண்டிருப்பதைக் கண்ட நீதிபதி, அவளுக்கு நீதி செலுத்தவேண்டும் என்ற எண்ணம் துளியும் இல்லாதவனாக இருந்தும் அவளுடைய நச்சரிப்புத் தாளமுடியாமல் அந்த வழக்கை விசாரித்து தீர்ப்பு செய்தானும். பொல்லாத நீதிபதியாகிய அவனே அவ்வாறு செய்தான் என்றால் நீதியுள்ள தேவன் தம்மை நோக்கிக்கூப்பிடுகிற பிள்ளைகளுக்குச் செவிகொடாதிருப்பாரா?

தகப்பன்மார்களாகிய நாம் சில வேளைகளில் நம்முடைய பிள்ளைகள் கேட்கிற எல்லாவற்றையும் உடனுக்குடன் வாங்கித் தந்து விடுவதில்லை. அவர்கள் அழுது, மன்றாடிக்கொண்டே இருக்கும்போது அவர்கள் அதைப்பற்றிக் கருத்தாய் இருக்கிறார்கள். என்று நாம் உணர்கிறபோது வாங்கிக் கொடுக்கிறோம். ஒருவேளை அவர்கள் ஒருமுறை கேட்டு விட்டுப்பின்னர் அதைப்பற்றி எண்ணம் இல்லாமல் இருந்தால் நாமும் கவனியாமல் விட்டுவிடுவோம். அதுபோல சில வேளைகளில் தேவனும்கூட நாம் தொடர்ந்து கேட்காமற்போனால் மௌனமாய் இருந்துவிடக்கூடும். ஆகவே நாம் தொடர்ந்து கருத்துடன் நம்முடைய தேவைகளைக்குறித்து அவரிடத்தில் மன்றாடும்போது நாம் அவர்மீது வைத்திருக்கிற நம்பிக்கையை மெச்சி நமக்குக் காரியங்களை வாய்க்கச் செய்வார்.

உண்மையாகவே ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கிறதினாலே நம்முடைய தேவைகளை அறிந்து நமக்கு ஏற்ற ஒத்தாசைகளைச் செய்ய வல்லவரான தேவனிடத்திற்கு நம்முடைய விண்ணப்பங்களையும், மன்றாட்டுகளையும் தெரிவிப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! அவ்விதமான ஆசீர்வாதங்களைப் பற்றி அறிந்த ஒருவன் எவ்வாறு இவ்வளவு நன்மைகள் தரக்கூடிய மேலான ஐக்கியத்தைத் தள்ளிவிட்டுத் தன் இச்சையாக நடந்து தேவ கிருபையை இழக்க முடியும்? இவைகளைப்பற்றி பிறகு சிந்திக்கலாம், இப்பொழுது இதற்கென்ன அவசரம்? என்று ஜெபிப்பதைத் தள்ளிப்போடுவது எவ்வளவு பயங்கரமான விளைவுகளைக் கொண்டு வரும் என்று சிந்தித்துப் பாருங்கள். நம்முடைய வாழ்க்கை எவ்வளவு நிரந்தரமற்றது, நாளை என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியாதே.

தேவனோடு ஒட்டுறவு இராத வாழ்க்கை இம்மையிலும் சரி மறுமையிலும் சரி பயன் அற்றது. ஆகவே சிந்தியுங்கள் காலதாமதம் செய்யாமல் கர்த்தரை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளையாக மாறி அவருக்குள் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று மகிழ்வடைவோமாக! உங்கள் வாழ்நாளில் நீங்கள் செய்த எந்த ஒரு தீர்மானத்தைக் காட்டிலும் இதுவே சிறந்த தீர்மானமாக இருக்கும் என்பதில் ஐயமே இல்லை, செயல்படுவோம்.

ஜே. சி. சோட்

# "திருமுகத்தைக்காட்டி விடு"

நாங்கள் வாழுமிந்த நானிலத்து வாழ்க்கையிலே
பாதைதெரிகிறது பயணந்தான் தொடர்வதில்லை
ஆத்து மத்து ராகம்வரும் அற்புதத்து வீணையிலே
கீதம் இசைப்பதில்லை கேட்பதெல்லாம் அபசுரந்தான்

கோலிழந்த குருடரைப்போல் குவலயத்துள் வாழுவதை
நாளும் நடந்து வரும் நடப்புகளால் நீயறிவாய்!
நிழலுக்கு ஆதாரம் நிற்கின்ற பொருளாகும்
மழலைக்கு ஆதாரம்-மங்கை அதன் தாயாகும்
பாவியெனக் காதாரம் பரமபிதா நீரன்றோ?
மேவி எனைக் காக்கவந்த மெய்பொருள் நீ ஆதாரம்!

மூச்சு விடும் காற்றினிலே மூழ்கிவிடும் எறும்பெனவே
மூச்சிருக்கும் காலம் வரை மோடி வித்தை காட்டுகிறோம்
ஆட்டத்தைத் துவக்கி வைத்து ஆடவைத்துப் பார்க்கின்றாய்
ஆட்டத்தின் முடிவினிலே அழவைத்தும் பார்க்கின்றாய்!

முதலும் உன் கையில் முடிவும் உன் கையில்
முற்றாக உணராத அறியாமை என் கையில்
அறியாமை நீக்கி எமை ஆதரிக்கும் இயேசுபரா
தெரியாத பேர்களுக்குன் திருமுகத்தை காட்டிவிடு!

மாலைவரும் தென்றலைப் போல் மதி மயக்கம் தீர்த்துவிடு
காலைவரும் கதிரவனாய்க் கருணையொளி வீசிவிடு!

A. சண்முகம்,

# கனி கொடுங்கள்!

தற்காலத்தில் மக்கள் மத்தியில் மாபெறும் பக்திப் பரவசம் ஏற்பட்டு விட்டதோ என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு எங்கு பார்த்தாலும் நற்செய்தி கூட்டங்கள், வீதிக்கு வீதி தெருப் பிரசங்கள் ஆலயங்கள் தோறும் மக்கள் வெள்ளம், வானொலிகளில் நாள்தோறும் பல்வேறு கூட்டத்தினரின் செய்திகள் இப்படி பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன; இவைகளெல்லாம் பாராட்டத்தக்க நல்ல அம்சங்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவைகளால் நாம் எதிர் பார்க்கிற அளவுக்கு நன்மைகள் ஏற்பட்டு வருகிறதா? மற்ற மதத்தினர்—அஞ்ஞான இருளில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் அந்த மக்கள் நம்முடைய பக்திமுறைகளைப் பற்றி என்ன அபிப்பிராயப் படுகின்றன? மத மாற்றத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் கூறுகிற உண்மையென்ன? அப்படி மதம் மாற்றப்பட்டவர்கள் உண்மையிலேயே மனம் மாற்றம் பெற்றிருக்கிறார்களா? என்று சிந்திக்கத் தலைப்பட்டால் நாம் விரும்புகிற அளவுக்கு திருப்திகரமான பதில் கிடைக்காது; பாவக் கறைகள் நீங்கி இரட்சிக்கப்பட்டு விட்டோம் என்று சுயதிருப்திப்பட்டுக் கொள்ளும் நம் கிறிஸ்தவ மக்களுடைய வாழ்க்கையை வினயத்தோடும் வியப்போடும் கூர்ந்து கவனித்துப் பார்க்கும் மனிதன், வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு இருக்க வேண்டும் என்று வேதகாமம் கூறுகின்ற நற்பண்புகளைத் துருவித் தேடிப் பார்த்தும் காணமுடியாமல் ஏமாற்றத்தோடும். வெறுப்போடும் திரும்பச் செல்லவேண்டிய நிலைதான் உள்ளது. மாயக்காரராகிய வேதபாதகரே! பரிசேயரே, உங்களுக்கு ஐயோ! ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குறீர்கள்.. மத் 23:15.

ஆம் சகோதரர்களே! எங்கும் எதிலும் போலித்தனம் பரவி விட்டதைக் காணும்போது நமக்கே மிகுந்த மனவேதனை ஏற்படுகிறது என்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு எப்படியிருக்கும்? வஞ்சகப் பிசாசின் சூது மதியால் பிதாவாகிய தேவனோடு மானிடர் கொண்டிருக்க வேண்டிய நல்லுறவை இழந்து பாவத்திலும், துக்கத்திலும், கண்ணீரிலும் சிக்கித் தங்களுடைய வாழ்க்கையில் நிம்மதியிழந்து அவதியுறும் மக்களின் துயர் துடைத்துக் கரையேற்றுவதற்கென்றே இவ்வுலகுக்கு வந்தார். லூக்கா 19:10. விண்ணுலகில் தேவனுக்கு சமமாக சகல சிறப்புகளையும் பெற்றிருந்தும் அவற்றை உதறித் தள்ளிவிட்டு ஏழையின் வயிற்றிலே பிறந்து, தாழ்மைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தார். பிலி 2:6-8 இன்னல்கள் பலபட்டு இன்னுயி-

ரைக் கொடுத்து இவ்வுலக மக்களை இரட்சிக்க வேண்டும் என்றே உதித்த இயேசு பெருமான் மரணம் வேதனையடைவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

வாரினால் அடித்தார்கள்—வாய் திறக்கவில்லை, தலையிலே குட்டி முகத்திலே துப்பி ஏளன சிரிப்புச் சிரித்தனர் – எரிச்சலடையவில்லை. தாகத்தால் நாவறண்டு தண்ணீர் கேட்டார். கசப்புக் கலந்த காடி—யைக் கொடுத்தார்கள்—கடுமொழி ஒன்றும் கூறிடவில்லை. பொன் மகுடம் சூட்ட வேண்டிய தலையில் முள்முடி, முட்கள் அழுத்தியதால் குருதி கொட்டுகிறது – குமுறி எழவில்லை. பாரச்சிலுவையைச் சுமக்க முடியாமல் கால்கள் பின்னுகின்றன—காரணம் கேட்கவில்லை. நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்தவரின் கால்களிலும் கரங்களிலும் ஆணிகள்-நா அசைத்தார், சபிக்கவல்ல—பிதாவினிடத்தில் அவர்களுக்காக மன்னிப்புக் கேட்டு மன்றாட.

தன்னைச் சித்திரவதை செய்த மக்களின் அறியாமையை மன்னிக்க வேண்டும் என்று மன்றாடுகிற இம்மகான் பரிசேயரையும், வேதபாரகரையும் பார்த்து "குருட்டு வழிகாட்டிகள்' என்கிறார். "வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை' என்கிறார். சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே என்கிறார். அப்பப்பா! எவ்வளவு கடுமை! ஏன் அவர்கள் மீது மாத்திரம் ஆண்டவருக்கு அவ்வளவு கோபம்! சொல்லப் போனால் மற்ற பிரிவைச் சேர்ந்த யூதர்களைக் காட்டிலும் இவர்கள் நியாயப் பிரமாணத்தை முறையாகக் கற்றவர்கள். நியாயப்பிரமாணத்தின்படி மிகவும் கவனமாக நடப்பவர்கள். இருந்தும் அவர்களையே குறி வைத்துத் தாக்குகிறாரே!

சமுதாயத்தின் உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கும் இந்தப் பெரிய மனிதர்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் ஆளானால் தன் உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று தெரிந்தும் சமயம் கிடைத்த போதெல்லாம் சாட்டையடி கொடுப்பது போல சாடுகிறார். ஏன்? ஏன்? ஏனென்றால் அவர்களுடைய தவறுகளை அவர்கள் உணர மறுத்து, போலி பக்தியில் மோகங்கொண்டு, தேவனுடைய ஆலோசனைகளையும் திட்டங்களையும் அறிந்து கொள்ள விருப்பமற்றவர்களாக இருந்தார்கள். வெளி வேஷத்தில் பிரியப்பட்டார்கள். வெளியிலே பார்ப்பவர்களுக்கு பக்தி மான்களைப் போலவும், கடவுளின் உண்மைத் தொண்டர்களைப் போலவும், மாயமான தாழ்மையுடன் பாசாங்கு செய்தார்கள். ஆனால் எல்லா விதமான அக்கிரமங்களையும் கூசாமல் நடப்பித்துக் கொண்டு தேவனுடைய ஆலோசனைக்குச் செவி கொடாமல் தங்களுடைய செல்வாக்கையும், செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதில் கவனமுள்ளவர்களாக இருந்தார்கள். இவைகளே அவருடைய ஆத்திரத்துக்குக் காரணம். இயேசு கிறிஸ்துவின் இனிய பண்புகளுக்கும் இரக்கபாவத்துக்கும் முற்றிலும் முரண்பாடான முறையில் அத்திமரம் ஒன்றைச்

சபித்தாரென்று மத்தேயு, மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம். மத் 21:18-32, மாற்கு 11:12-14 ஏன் அவ்வாறு சபித்தார்? தன்னுடைய பசியைப் போக்குவதற்கு பயனில்லாத மரம் நாசமாகட்டும் என்று சபித்திருப்பாரா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. பிசாசினால் வனாந்தரத்திலே சோதிக்கப்பட்ட நேரத்தில் நாற்பது நாள் இரவு பகல் பட்டினியைச் சகித்துக்கொண்டு, மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று தெளிவாய்க் கூறினவர் சமாரியா நாட்டுச் சீகார் என்னும் சிற்றூரில் வயிற்றுக்குத் தேவையான உணவைவிட என்னை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதான் சிறந்த உணவு என்று கூறி பசியை மறந்து தெய்வத்திருப்பணியில் ஈடுபட்டவர் யோவான் 4:31 ff கேவலம் தனக்குப் பயன்படாதது அழிந்தொழியட்டும் என்ற கீழ்த்தரமான வாழ்க்கை நெறியாளர்களுடைய நிலைக்குத் தாழ்ந்து விடுவாரோ? சுவ நிச்சயமாக இருக்கவே இருக்காது.

பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் சாத்வீகத்துக்கும் உறைவிடமான நமது கர்த்தர் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற பாணியில் ஆத்திரமடைந்து சபித்திருப்பாரா? கற்பனை செய்து பார்க்க முடியாத குற்றச்சாட்டு. பின்னர் என்னதான் காரணமாக இருக்க முடியும்? தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது செழித்து வளர்ந்து பசுமையாகத் தோற்றமளித்த அந்த அத்திமரம், மரங்களின் சிறப்பு நிலையாகிய கனி கொடுக்கும் நிலையில் இல்லாததுதான் அவருக்கு ஆத்திரம் உண்டாக்கிய காரியம்—தோற்றம் ஒன்று; நிலைமை வேறு; சொல் ஒன்று; செயல் வேறு இதுதான் இரட்சகரின் கோபத்துக்குக் காரணம் குற்றங்கள் குறைகள் இருப்பது மனித இயல்புதான். அது ஆண்டவருக்குத் தெரியாததல்ல. இல்லாத ஒன்றை இருக்கிறமாதிரி காட்டுகிற போலித்தனத்தையே கர்த்தர் வெறுக்கிறார்.

தேவனுடைய உன்னதமான நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற மக்களே! நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அதன் பலனை மறுதலிக்கிறவர்களாக இருக்கிறோமா? அல்லது நாம் இந்த உலகத்துக்கு வெளிச்சமாகவும் பூமிக்கு உப்பாகவும் இருக்கிறோமா? தயவு செய்து சிந்தித்துப் பார்ப்போம். தேவன் அன்புள்ளவர், கிருபையுள்ளவர், இரக்கமுள்ளவர், பொறுமையுள்ளவர் என்பது மெய்தான் அதே நேரத்தில் நீதியுள்ளவர், பாரபட்சமில்லாதவர், எரிச்சலுள்ளவர் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. நம்மீது இரக்கமும் அன்பும் கொண்ட காரணத்தினால்தான் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்துக்குத்தந்தருளினார். யோவான் 3:16 நம்முடைய பலவீனங்களைப் புரிந்துக் கொண்டதினால்தான் நாம் அனுதினம் செய்து வருகிற பலவித-

மான தீச்செயல்களைப் பொறுமையோடு சகித்துக் கொண்டுவருகிருர். ஆனல் எல்லாவற்றுக்கும் ஒரு எல்லையும் ஒரு முடிவும் உண்டு என்பதை மறந்துவிடலாமா?

நம்மைக் காட்டிலும் சடங்காச்சாரங்களில் அதிக கவனம் செலுத்திக்கொண்டு; தங்கள் சுய நீதியில் பெருமைகொண்டு வாழ்ந்த பரிசேயர்களையே விட்டு வைக்காமலும் தயவு தாட்சண்யம் காட்டாமலும் திட்டி ''மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்'' என்று சூடான அறிவுரை கூறுகிருர். எவ்வளவுதான் உறுதியுள்ளதாக இருந்தாலும் என்னதான் பசுமையான தோற்ற முள்ளதாக இலைகள் நிறைந்ததாக காட்சியளித்த போதிலும் மரத்தின் தலையாய நிலை கனி கொடுப்பதுதான், அதுபோல ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு பக்தி முயற்சிக் காரியங்களில் ஈடுபாடு கொண்டு, என்னதான் ஆசீர்வாதங் களையும், வரங்களையும் பெற்றிருந்தாலும், தன்னுடைய வாழ்க்கையில் ஆவியின் கனிகளைத் தராத வரையில் அவனுடைய ஆசீர்வாதம் நிறைவு பெற்ற தாகாது. தேவன் அங்கீகரிக்கும் வாழ்வை ஒருவன் விரும்பினல் அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவைகளைப் பெற்றிருக்க வேண்டும். சரியான அடிப்படையின் மேல் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை கட்டுகிற எவரும் மேற்சொன்ன கனிகளைப் பெற்றே ஆகவேண்டும் இவைகள் நம்மிடத்தில் காணப்படவில்லையென்ருல் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏதோ கோளாறுகள் இருக்கின்றன என்று பொருள். தயவு செய்து கொத்தி எருப்போடுவோம் தண்ணீர் பாய்ச்சுவோம் தேவன் விளையச்செய்வார்.

E. Z செல்வநாயகம்


**கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து**
**ஆராதியுங்கள்**

21, தேவசகாயம் தெரு **நாகர்கோவில்-629001**

**ஞாயிறு ஆராதனை காலை 8-30 மணி**
**ஞாயிறு சிறுவர் வகுப்பு மாலை 4-00**
**வெள்ளி வேதாகம ஆய்வு மாலை 6-30 மணி**
அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்.

# சபை வளர்ச்சியில் பெண்களின் பங்கு

சபைகளில், மற்ற பிரிவினைக் கூட்டங்களில் பெண்களுக்கு, ஆண்களுக்குச் சமமாக ஏராளமான வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றன ஆனால் கர்த்தருடைய சபையில் பெண்களுக்கு அப்படி இல்லையே என்று சில சகோதரிகள் அங்கலாய்ப்பதை நாம் பார்க்கிறோம். வேதாகமம் பெண்களின் உரிமைகளை மறுக்கிறது என்று கூறுவது நியாயம் ஆகாது. அப்படிச் செய்வது தேவனுடைய அநந்த ஞானத்தைக் குறை கூறுவதாக அமையும், பெண்களுடைய பலமும் பலவீனமும் அவர்களைப் படைத்த தேவனைவிட அதிகமாகத் தெரிந்தவர்கள் யார் இருக்கமுடியும்? ஆகவே அப்படிப்பட்ட தவறான சிந்தனைகளை அகற்றி விட்டு பெண்கள் சபை வளர்ச்சிக்கு வேதாகமம் கூறுவதற்கு உட்பட்டு எவ்வாறு உதவலாம் என்று தேவஆலோசனைகளைத் தேடி வாசிப்போம்.

சொல்லப்போனால் சபையின் ஆராதனை நேரம், வேத ஆய்வு போன்ற நிகழ்ச்சி நேரங்கள் எல்லாம் வாரத்தின் இதர நாட்களில் செய்யப்படவேண்டிய வேலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகமிகச் சொற்பமே. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பேச வேண்டும், மேடையேற வேண்டும் என்ற துடிப்பு, கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைக் காட்டிலும் தான் ஒரு முக்கியஸ்தர் என்று விளம்பரத்திக் கொள்ளுவதற்கே பயன்படும். ஆகவே சகோதரிகளே! என்னோடு சேர்ந்து உங்கள் வேதாகமங்களைப் படியுங்கள். தேவ ஆலோசனைகளை மீறாமல் அவருடைய பணிகளைச் செய்த கண்ணியமுள்ள சகோதரிகளை உங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன்.

தொழுகையும், ஊழியமும் ஒன்றல்ல, தொழுகை நேரம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிடைக்கிற சிலாக்கியம். அந்த ஒரு ஊழியம் என்றோ சேவை என்றோ கூறக் கூடாது. தொழுகை கடவுளைத் துதித்து மகிழ்வதற்கான ஒரு வாய்ப்பு. தொழுகையின் மூலமாகவும், வேத ஆய்வுகளின் மூலமாகவும், நம்முடைய ஆவிக்குரிய ஆகாரத்தைப் பெற்றும், ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொண்டும் பலம் அடைகிறோம். அந்த பலத்தைக்கொண்டு வாரத்தின் மற்ற நாட்களில் தேவனுக்கடுத்த பணிகள், ஊழியங்கள் ஆகியவற்றைச் செய்து ஆண்டவருக்கு மகிமை உண்டாக்கலாம்

" ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு

கொடுக்கிறதில்லை அவர்கள் அமைதியாக இருக்கவேண்டும்'' I தீமோ 2;11, 12. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள் பேசும்படி அவர்களுக்கு உத்திரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே'' 1 கொரி 14 : 3, 4, 35. இந்த வசனங்களின் மூலமாக பெண்மைக்கு அடக்கமே சிறந்த அணிகலன் என்று பவுல் ஆவியானவர் மூலமாக எழுதுகிறார், அதைமீறி ஒருவர் செயல்பட்டால் அது தேவ ஆலோசனை மீறல் குற்றமாகும்.

பிலிப்பியர் நிருபம் 4 : 3ல், அன்றியும் என் உத்தமக் கூட்டாளியே, அவர்களுக்கு (கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்கிற எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும்) உதவியாக இருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் கிலேமந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங்கூட சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப் பட்டார்கள் என்று பாராட்டி எழுதுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகோதரிகள் மேடையேறி பிரசங்கித்து தேவ ஆலோசனைகளை மீறாமல் ஊழியத்தில் பங்கு பெற்று பாராட்டும் பெற்றிருக்கிறார்கள்.

ரோமர் நிருபம் 16:1, 2 ஆகிய வசனங்களில் "கெங்கிரேயா ஊர்சபைக்கு ஊழியக்காரியாகிய (பிரசங்கியாக அல்ல) நம்முடைய சகோதரியாகிய பெபேயாளை . . . அவள் அநேகருக்கும் எனக்கும்கூட ஆதரவாக இருந்தவள் என்கிறார் பவுல். ஊழியங்களைத் தாங்கி ஆதரிப்பது மேடைப் பிரசங்கமாக இருந்திருக்காது என்று நம்பலாம்.

அடுத்து ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் பார்ப்போம். அவர்களை பவுல் உடன் வேலையாட்கள் என்றும், பவுலின் பிராணனைக் காப்பாற்ற அவர்கள் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் என்றும் சான்றிதழ் வழங்குகிறார். ரோமர் 16 : 3, 4. சபையார் அனைவரும்கூட நன்றி தெரிவிக்க வேண்டிய அளவுக்கு தியாக உணர்வு, தொண்டுள்ளம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்று காண்கிறோம். மேலும் அதே அதிகாரம் 6-ம் வசனத்தில் எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள் என்று மரியாளின் தொண்டுள்ளத்தை நினைவு கூறுகிறார், இங்கேயும் மேடைப் பிரசங்க வாய்ப்புபற்றிப் பேச்சு இல்லை.

அப்போஸ்தலர் 16 : 14, 15ல் லீதியாள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பிறகு பவுலையும், அவன் உடன் வேலையாட்களையும் தன்னுடைய இல்லத்தில் ஏற்றுக்கொண்டு உபசரித்து மகிழ்ந்தாள். இந்தச் சம்பவங்கள் எவைகளிலும் மேடைப் பிரசங்க வாய்ப்புகளை நாம் காணமுடியவில்லை.

அப் 18 : 26 . . . . . . ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் (அப்பொல்லோ) பேசுகிறதைக்கேட்டு அவனைச் சேர்த்துக்கொண்டு

தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாகப் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். இங்கே ஆக்கிலாவும், பிரிஸ்கில்லாளும் தனிப்பட்ட ஒரு நபருக்குக் காரியங்களை விளக்கித் தெளிவு படுத்துகிறார்கள். இதில் ஆக்கில்லாவுக்கு உதவியாக பிரிஸ்கில்லாள் வேத வசனங்களை எடுத்துத் தருதல்,... போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்கத்தான் வாய்ப்பு இருந்திருக்குமேயன்றி ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தும் வாய்ப்புக்கு ஆதாரமில்லை.

அடுத்து அப் 9 : 39-ல் தொற்காள் என்ற சகோதரியின் மரணத்தின்போது அந்தப் பகுதிகளில் வாழ்ந்த விதவைகளும், ஏழை மக்களும், தங்களுக்கு தொற்காள் கொடுத்திருந்த அங்கிகள், வஸ்திரங்கள் ஆகியவற்றைக்காட்டி தங்கள் நன்றிகளைத் தெரிவித்து அழுதார்கள் என்று வாசிக்கிறோம். அங்கேயும்கூட தொற்காளின் தொண்டுள்ளம், இரக்க சுபாவம் இவைகளைத்தான் நாம் காணமுடிகிறது. அப்படியானால் பெண்கள் வாயே திறக்கக்கூடாதோ? அப்படியல்ல பொறுமையாக இன்னும் சில வசனங்களைப் பார்க்கலாம்.

தீத்து 2 : 3, 4-ல் முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய சகோதரிகளுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்ல வேண்டும் என்று கூறுகிறது. அதாவது பெண்கள் பெண்களுக்குப் பிரசங்கித்து புத்தி சொல்லலாம். அதற்கு அனுமதி உண்டு. என்று கூறுகிறது மேலும் 2 தீமோ 1 : 5ல் ஐனிக்கேயாளும், லோவிசாளும் இளைஞன் தீமோத்தேயுக்குக் கற்றுத் தந்த காரியங்களினால் அவன் விசுவாசத்தில் பெலனடைந்து பவுல் அப்போஸ்தலனே பாராட்டும் வண்ணம் சிறந்தவனாகக் காணப்படுவதற்கு அவனுடைய பாட்டியும், தாயாரும் பொறுப்பு என்கிறது. அப்படியானால் நம் குடும்பங்களில் வளரும் குழந்தைகளுக்கு சத்தியத்தை போதித்து, நல்லொழுக்கத்தில் வளர்ப்பது தாய்மார்களின் கடமை என்றும் புரிந்து கொள்ளுகிறோம். அதாவது பெண்கள் மத்தியிலும் சிறுவர்கள் மத்தியிலும் சகோதரிகள் போதித்து புத்தி சொல்வதற்குத் தடையேதும் இல்லை.

மாற்கு 15 : 40, 41ல் மகதலேனா மரியாள் வேறொரு மரியாள், சலோமே, இப்படி அநேக ஸ்திரீகள் முதலாம் நூற்றாண்டில் கர்த்தருக்குச் 'சேவை' செய்து தேவனைப் பிரியப்படுத்தினார்கள். நாமும் அவர்களைப் பின்பற்றி தேவனைப் பிரியப்படுத்த முடியும். ஆசீர்வாதத்தையும் பாராட்டையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே தேவ ஆலோசனைகளைப் புறக்கணித்துவிட்டு தங்கள் விருப்பத்துக்கேற்றபடி நடக்க விரும்புகிறவர்களை மறந்து விட்டு சபையின் வேலைகளில் பெண்கள் எவ்வாறு பங்கு கொள்ளலாம் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

**இதோ சில ஆலோசனைகள் :**

1. முதலாவதாக நீங்கள் குடும்பத்தோடு உரியநேரத்தில் ஆராதனை மற்றும் சபை கூட்டங்களுக்குச் செல்லுங்கள். எபி 10;25,

2. வீட்டில் தினந்தோறும் வேத வாசிப்பு, ஜெபம் போன்றவைகளைத் தவறாமல் முழுக்குடும்பமும் சேர்ந்து செய்யுங்கள்.

3. பெண்கள் ஐக்கிய சங்கக் கூட்டங்களில் சத்திய வசனத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். படிப்பறிவில்லாதவர்களுக்கு சத்தியத்தை விளக்கிக் கூறுங்கள்.

4. சபை கூடும் நேரத்துக்கு முன்பாக வந்து கர்த்தருடைய பந்தி ஆயத்தம், சபைகூடம் சுத்திகரிப்பு போன்ற பணிகளில் உதவி செய்யுங்கள்.

5. ஆராதனை-மற்றும் இதரக் கூட்டங்கள் முடிந்தபிறகு சபைக் கூடத்தை ஒழுங்குபடுத்த உதவுங்கள்.

6. ஞாயிறு பள்ளி நடத்த உதவுங்கள்.

7. ஆர்வமுள்ள மற்ற பெண்களையும் சேர்த்துக்கொண்டு கீழ்க்காணும் திட்டங்களை அமுல்படுத்துங்கள்.

அ. ஆராதனைக்கு வராதவர்களை, நோய்வாய்ப்பட்டிருப்பவர்களைப் பார்த்து ஆறுதல் சொல்லுங்கள்; ஜெபியுங்கள்.

ஆ. பெண்கள் ஐக்கிய கூட்டங்களில் தவறாமல் பங்குகொண்டு மற்ற சகோதரிகளையும் உற்சாகப் படுத்துங்கள்.

இ. வியாதியஸ்தர்களுக்குத் தேவையான ஏதாவது உணவுப் பண்டங்கள் தயாரித்துக் கொடுத்து உதவுங்கள்.

ஈ. விசேஷக் கூட்டங்கள் அல்லது நாட்களில் ஆராதனைக்கூடத்தைக் கழுவுதல், அலங்கரித்தல் அல்லது வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளில் ஒத்தாசை செய்யுங்கள்.

8. உங்களுடைய சிநேகிதர்கள் அல்லது பக்கத்து வீட்டார்களை மதிய உணவுக்கோ அல்லது மாலை தேநீருக்கோ வாரம் ஒரு முறையோ அல்லது சௌகரியப்பட்ட பொழுதே அழைத்து சத்தியத்தை எடுத்துச் சொல்லுங்கள்.

9. உங்கள் கணவருடன் சேர்ந்து சத்தியத்தைக் கற்றுக்கொள்ள விருப்பமுள்ள வீடுகளைச் சந்தித்து இயேசுவை அறிமுகப் படுத்துங்கள்.

10 உங்கள் அயலகத்தாருடைய தேவைகளையும், சூழ்நிலைகளையும் அறிந்து உதவி செய்யுங்கள். சில வேளைகளில் உங்களுடைய பரோபகாரம், அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த உதவும். ஆகவே சபையின் பணிகளில் பங்குகொண்டு தேவ ஆசீர்வாதத்-

தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் சகோதரிகளுக்குப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையில் செயல்படுத்தினால் சபையும் வளரும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் மேம்பாடு அடையும். ஆண்டவருடைய ஆசீர்வாதமும் கிட்டும். வீணான சிந்தனைகளை அகற்றி அடக்கமாகச் செயல்படுவோம் அதுவே கர்த்தருக்குப் பிரியம்.

— பெட்டி பர்டன் சோட்
**Betty Burton Choate.**

## பாதச் சுவடுகள்

ஒரு மனிதன் ஒரு இரவில் ஒரு கனவுகண்டான். அதில் தன் வாழ்வில் அதுவரை கடந்துவந்த பாதை முழுவதும் அவன் கண்முன்பு பரந்துகிடந்தது. அருகில் இயேசுகிறிஸ்து நின்று கொண்டிருந்தார். மேலும் அவன் கடந்துவந்த கரடுமுரடான பகுதிகளில் தாறுமாறான மேடுபள்ளங்களிலும் அவன் ஒரே ஒரு ஜோடி கால்தடங்களை மட்டும் கண்டான். ஆனால் சமவெளிப்பிரதேசத்திலும், பசுமை நிறைந்த சோலைப் பகுதியிலும் அவன் அருகே மற்றொரு நபரும் நடந்துவந்தது போன்று இரண்டு ஜோடி கால் தடங்களைப் பார்த்தான்.

அருகில் நின்ற (கனவில் தான்) இயேசுகிறிஸ்துவை நோக்கி "இயேசுவே, ஒரு விஷயம் எனக்குப்புரியவில்லை. சமவெளியிலும் பசுமையான பகுதிகளிலும் என் கூடவே நடந்துவந்த ஒருவர் கரடுமுரடான பகுதிகளிலும் மேடுபள்ளங்களிலும் மட்டும் என்னைத் தனியே நடக்கவிட்டுவிட்டு மறைந்துவிட்டார் போல் இருக்கிறதே! ஏன்எனில், கடினமான பாதைகளில் எல்லாம் நான் ஒரே ஒரு ஜோடி கால் தடங்களை மட்டுமே காண்கிறேன்" என்று கேட்டான் இயேசு அவனைப்பார்த்துக் கூறினார், "மகனே, உன்வாழ்க்கை எளிதாக இருந்த போது நான்தான் உன் அருகில் நடந்துவந்தேன். பாதை எங்கு கடினமாக இருந்து, நீ நடக்க இயலாமல் துவண்டாயோ அங்கு நான் உன்னைத் தூக்கிச் சுமந்து சென்றேன். எனவே நீ காண்கிற ஒரு ஜோடி பாதச் சுவடுகள் உன்னுடையதல்ல, அது என்னுடைய பாதச் சுவடுகள்" என்றார்.

— எஸ். எஸ். ராஜன்

# கிறிஸ்தவர்களே உஷார்!

சிறு பிள்ளைகளைப் பள்ளிக்கோ மற்றும் வெளியில் எங்காவதோ அனுப்ப நேரிட்டால் பார்த்துப்போ, கவனித்து நட என்றெல்லாம் தாய்மார்கள் கவனஈர்ப்பு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறதை நாம் கவனித்திருப்போம். ஏனெனில் தற்காலத்துப் போக்குவரத்து நெரிசல்கள், திருடர்பயம் போன்ற காரியங்களினால் விபத்துக்களும் ஏற்படலாம் என்ற பயமே காரணம்.

அதே போன்று புதிய ஏற்பாடு முழுவதிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் விசுவாசிகள் எச்சரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம் ஒரு சமயம் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது, நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்கள் என்று சொல்லுகிறார் மாற்கு 14 : 34. ஏன் அப்படிக் கேட்டுக்கொண்டார்?

தம்மைப் பிடிக்க வருபவர்களைப் பார்த்து பயந்து அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அப்படிக் கேட்டுக் கொண்டாரா? இந்தக் கேள்விக்குரிய பதில் வெகு தொலைவில் இல்லை. வசனம் 38ஐ வாசித்தாலே போதும். நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்". அதன் சுருக்கம் என்னவெனில் நாம் உஷாராக இல்லாவிட்டால் சோதனைக்குள் அகப்படுவோம் என்பதே.

மேலும் பவுல் அப்போஸ்தலன் கூட தெசலோனிக்கே சபையாருக்கு எழுதும்போது, ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாக இருக்கக் கடவோம். 1 தெச 5:6. இங்கே பகலின் பிள்ளைகளுக்கும், இரவின் பிள்ளைகளுக்கும் இருக்கிற வித்தியாசத்தைக் காண்கிறோம். (வ. 5) இரவின் பிள்ளைகள் விழித்திருக்கமாட்டார்கள். ஆனால் பகலின் பிள்ளைகள் என்று சொல்லப்படும் கிறிஸ்தவர்கள் தூங்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். ஆவிக்குரிய மேன்மைகளை உணராமல் ஒருவிதமான மாயையில் சிக்குண்டு மகிழ்ச்சி கொள்ளும் மக்களின் அவல நிலையை விளக்க தூக்கம் ஒரு நல்ல உதாரணம்.

மெய்யான பாதுகாப்பு, மறுபடியும் பிறந்து, ஜீவனுள்ள நம்பிக்கைக்கு பாத்திரவான்களாகி பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிற சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்பவர்களுக்கே உண்டு (1 பேதுரு1:3,4). அப்படிப்பட்டவர்கள் யார்? என்ற கேள்விக்கு பேதுருவே அடுத்த

வசனத்தில்' பதில் கூறுகிறார். ''விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டவர்களுக்கு'' -அவர்களைக் காப்பது விசுவாசம். அந்த விசுவாசமே அவர்களுடைய பாதுகாப்பு. ஆகவே இவ்விதமான விசுவாசத்துடன் விழித்திருப்பவர்களுக்கு, என்பதாகும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் விழித்திருக்க வேண்டியது அவசியம் என்பதை நாம் விசுவாசிக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் சர்தை சபையைக் கீழ்க்கண்டவாறு எச்சரிக்கிறான் '' நீ விழித்துக் கொண்டு சாகிறதற் கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து .....நீ விழித்திராவிட்டால் திருடனைப்போல் உன்மேல் வருவேன்...... வெளி 3:2, 3 இங்கேயும் உஷாராயிருக்க வேண்டும் என்பதே அறிவுரை. ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் உஷாராயிருக்க வேண்டிய சில விஷயங்களைக் கவனிப்போம்.

1. **விசுவாசம் :** அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்? மத் 14 : 31 விசுவாசத்துக்கு அடிக்கடி பயிற்சி கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும் இல்லாவிட்டால் சோர்ந்து போகும். விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதினாலே வருகிறது. அதைப் பலம்படுத்துவதும்கூட தேவனுடைய வசனமே (ரோமர் 10:17). விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடும்படியாக அநேக கள்ளப் போதகங்கள் உள் நுழைந்திருப்பதால் அதைக் காப்பாற்றுவதற்கும், பலப்படுத்துவதற்கும் நாமும் அதைவிட அதிகமாகவே முயற்சிக்க வேண்டும்.

**உணர்வுகள் :** நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள். உங்கள் எரிச்சல் சூரியன் அஸ்தமிக்கிறதுக்குள்ளாகத் தணியக்கடவது எபே. 4:26. நம்முடைய உணர்வுகளைக் உஷாராகக் காவல் செய்யாவிடில் பல தீமையான விளைவுகள் நேரிடும் அபாயம் இருக்கிறது. நட்பு பாதிக்கப்படலாம், குடும்பத்தில் பிளவு உண்டாகலாம். சபை துண்டாடப்படலாம். ஆத்துமாக்கள் நஷ்டமடையலாம். ஆகவே இந்த விஷயத்திலும் நாம் உஷாராகவே இருக்கவேண்டும்.

**ஒழுக்கம் :** கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு இடம் கொடாமல் அவர்களைக் கடிந்து கொள்ளுங்கள் எபே. 5 : 11. தற்காலத்தில் ஒழுக்க நிலை படுமட்டமாகத் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது. ஆபாசமான சினிமாக் காட்சிகள், வீடியோ நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு விதமான நவீனக் கண்டு பிடிப்புகளின் மூலமாக நாகரீகம் என்ற பெயரில் பல ஒழுக்கக்கேடுகளுக்கு சமுதாய அங்கீகாரம் கிடைத்துவிடுகிறது. அவைகள் ஒழுக்க நெறிகளைப் பாதுகாக்க விரும்புகிறவர்கள் மேலேயும் திணிக்கப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். நாம் இவ்விஷயங்களிலும் கூட உஷாராக இல்லாவிட்டால் நம்முடைய மன உறுதியும் சிதைக்கப்பட்டு பெரும்பான்மையினரின் கருத்துக்கு அடிபணிய நேரிடும்.

**4. பேச்சு :** "உன்பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது மத் 26 : 73 பேதுரு கலிலேய மக்களின் வழக்கப்படி பேசினான். நாமும்கூட உஷாராயிராவிட்டால் உலகத்தார் அதாவது அவிசுவாசிகள் பேசுகிற தகாத முறை வழக்கச் சொற்களெல்லாம் நம்முடைய பேச்சுகளிலும் நுழைந்து விடும். நம்முடைய உரையாடல்களும், பேச்சு வார்த்தைகளும் கிறிஸ்துவைப் பின் பற்றுபவர்களுடைய சம்பாஷணையைப் போல் இராமல் இருந்தால் நாம் எதனால் தேவனுடைய பிள்ளைகள் என்று அறியப்படுவோம்? இது விஷயத்தில் பவுலின் ஆலோசனையை எபே 4 : 29ல் வாசித்துப் பார்ப்போம். "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயில் இருந்து புறப்பட வேண்டாம் பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள்"

**5. உடை:** தேவ பக்தியுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றவாறு – விலையேறப்பெற்ற வஸ்திரத்தினால் அல்ல, தகுதியுள்ள வஸ்திரத்தினால் அல்ல, தகுதியுள்ள வஸ்திரத்தினாலும் ... தீமோ 29,10. உடைகளைப் பொறுத்த வரையில், தற்கால நாகரீக யுகத்தில் நாளுக்கொரு புதுமைகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அவைகள் மேனியழகை மிகைப்படுத்திக் காட்டி, கீழ்த்தரமான, இச்சைகளைத் தூண்டும் வகையில் அமைந்திருப்பது விசனிக்கத் தக்க காரியம். ஆனால் அதைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் நம் கையில் இல்லை. ஆனாலும் ஒன்று நமக்கு முடியும். நாமும் நமது வீட்டாரும், கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதர சகோதரிகளும் இவ்விதமான அவலத்துக்கு ஆளாகாமல் தகுதியான உடைகளைத் தேர்ந்தெடுக்கிற விஷயத்தில் உஷாராக இருக்கலாம்.

இறுதியாக பவுல் அப்போஸ்தலன் எபேசியருக்கு எழுதுகிற வண்ணம் "எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதல்களோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே" ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும், சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் எப 6 : 18.


**புதுக்கோட்டை**

**கிறிஸ்துவின் சபை கூடும் இடம்**

எண். 53, ரெயில்வே ஸ்டேஷன் அருகில்

புதுக்கோட்டை-622003

ஞாயிறு ஆராதனை காலை 9-30 மணி

வியாழன் வேதாகம ஆய்வு மாலை 6-30 மணி

# ஜென்ம பாவம்

ஜென்ம பாவம் என்பது ஆதாம் ஏவாள் ஏதேன் தோட்டத்தில் செய்த பாவத்தின் விளைவாக உலகில் பிறக்கிற எல்லாக் குழந்தைகளுமே "பாவிகள்" என்று நம்புகிற சமய நம்பிக்கையாளர்களின் கூற்று. இதைப் பிறவிப்பாவம் அல்லது ஆகாமல் உண்டான பாவம் என்றும் கூறுவர். இது ஒவ்வொரு தலைமுறையிலும் தங்களுடைய பெற்றோர்களால் பிள்ளைகளுக்கு வந்து சேருகிறது என்று நம்பி ஏற்கின்றனர். இப்படிப்பட்ட நம்பிக்கைக்கு ஆதாரமாக பரிசுத்த வேதாகமத்தில் எவ்வித சான்றுகளும் கிடையா.

சற்றேறக்குறைய கி. பி. 1600-ஆம் ஆண்டு வாக்கில் ரோம் நகரில் "பிஷப்" பதவி வகித்த செயிண்ட் அகஸ்தீன் என்பவர் தான் இத்தக்கொள்கை உருவாவதற்கு மூல காரணமாக இருந்தவர் என்று வரலாறு கூறுகிறது. இக் கொள்கையாளர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது இப்பாவம் முற்றிலும் நீங்கிப் போகிறது என்றும் விசுவாசிக்கின்றனர். இவ்வகையாய் பாவநிவாரணம் பெற்ற குழந்தை வளர்ந்து பெரியவனாகும்போது எவ்வாறு தன்னுடைய குழந்தைகளுக்கு இந்தப் பாவத்தைச் சுதந்தரிக்கச் செய்ய முடியும் என்பது நமக்கு விளங்காத புதிராக இருக்கிறது. இந்தக் கொள்கையாளர்கள் தங்கள் கருத்தை நிலை நாட்டுவதற்கு கீழ்க்காணும் ஐந்து வசனப்பகுதிகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

**1. யாத் 20 : 5, & உபா. 5 : 9; 2. சங் 51 : 5; 3. யோபு 25 : 4; 4. ரோமர் 3 : 23 5. ரோமர் 5 : 19.**

ஆகவே நாம் மேற்சொல்லப்பட்டிருக்கிற வசனங்களை வாசித்து சரியான பொருளைக் கண்டு பிடிக்க முயற்சிப்போம். முதலாவதாக யாத் 20:5 ஐயும் உபா. 5:9 ஐயும் சேர்த்துப்பார்ப்போம். இவைகள் இரண்டும் ஒரே கருத்தைத்தான் தெரிவிக்கின்றன "நீ அவைகளை (சொரூபம், விக்கிரகம்) நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்".

இந்த வசனம் சொல்லுவதும் சொல்லாததும் எது? என்பதைக் கவனியுங்கள். முதலாவது "அவனைப் பகைக்கிற சில, பல பிதாக்களை" எல்லாத் தகப்பனார்களையும் அல்ல; இரண்டாவது காலக்கெடு கொடுத்

திருக்கிறார்-மூன்றும் நான்காம் தலைமுறை- ''நித்தியத்துக்கும் '' என்று கூறவில்லை. மூன்றாவது இந்த தண்டனை குறிப்பிட்டவர்களுக்கு அதாவது அவரைப் பகைக்கிறவர்களுக்கு மட்டுமே! நான்காவதாக, அவர்களுடைய ''பெற்றோர்களின் அக்கிரமத்தை''. ஆதாமின் அக்கிரமத்தை என்று கூறவில்லை.

இறுதியாக 6-ம் வசனத்தில் அவரிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்பவர்களுக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் காட்டுவேன் என்று கூறுகிறது. ஆகவே இந்த வசனங்களில் உலகளாவிய ஜென்ம பாவக் கொள்கையாளர்களின் கருத்துக்கு எந்த ஆதாரமுமில்லை என்பதைப் பாருங்கள். தேவனைப் பகைத்து அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களைத் தேவன் மூன்றும் நான்காம் தலைமுறை வரைக்கும் விசாரிப்பேன் என்று சொன்ன வண்ணம், சில வியாதிகளின் விஷயத்தில் தற்கால மருத்துவ விஞ்ஞானமே சான்றாக அமைந்துள்ளன என்பதை நாமே கண்கூடாகப் பார்க்கிறோம்.

அடுத்து சங் 51 : 5ஐப் பார்ப்போம். முதலில் தலைப்பை வாசிப்போம். பெத்சேபாளிடத்தில் தாவீது பாவத்துக்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி தாவீதினிடத்தில் வந்து அவன் பாவத்தை உணர்த்திய போது பாடி இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம் இந்த பயங்கரமான பாவத்தைக் குறித்து கர்த்தர் நாத்தான் தீர்க்கதரிசியின் மூலமாக தாவீதைக் கடுமையாகக் கண்டிக்கிறார். இதன் விபரமான தகவல்களை 2 சாமுவேல் 11-ம் அதிகாரத்திலும், 12-ம் அதிகாரத்தின் 1-14 வசனப் பகுதிகளிலும் அறியலாம்.

இதிலேயும் சொல்லப்பட்டவைகள் எவை சொல்லப்படாதவைகள் எவை என்பதைக் கவனியுங்கள். இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன் என்தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள். தாவீது தன்னைப்பற்றித்தான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகிறார். இங்கே பாவத்தில் சிக்குண்டதாக வர்ணிக்கப்படுபவர் தாவீது அல்ல; அவருடைய தாயாரே, தாவீதுடைய தாயார் எப்படிப்பட்ட பாவத்தில் சிக்குண்டாள் என்பது நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. ஒருவேளை அவருடைய மூதாதையர்களில் ஒருத்தியாகிய தாமார் (ஆதி 18:11-30) செய்த பாவத்தை இங்கே குறிப்பிடுகிறாரா? ஏனெனில் யூதர்கள் ''தாய்'' என்கிற சொல்லை பெற்ற தாய் என்பதற்கு மட்டும் அல்ல. பொதுவாக அவர்கள் சந்ததியில் வந்த எந்தத் தாயையும் குறிக்கும் வகையில் பயன்படுத்துவர். தான் பெத்சேபாளிடத்தில் பாவம் செய்வதற்கான தீய இயல்பு தன் முன்னோர்களின் பாவஞ் செய்யும் இயல்பினால் தன்னுள் வந்துசேர்ந்தது என்று ஒருவித சுய திருப்திப் பட்டுக் கொள்கிறார் என்று தோன்றுகிறது. பொதுவாக கருத்தரித்தலே

துன்பாவச் செயல் என்று சொல்லாமல் தன்னைப் போன்று பாவம் செய்யும் இயல்புடைய முன்னோர்களுக்குப் பிறப்பவர்களை மட்டும் குறிப்பிடுகிறார் என்றுதான் கொள்ளவேண்டும்.

இப்பொழுது யோபு 25 : 4ஐ ஆராய்வோம் இப்படியிருக்க மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? ஸ்திரீ-யினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி? அதாவது ஸ்திரீயினிடத்தில் பிறந்த ஒவ்வொருவரும் பாவம் செய்யும் இயல்புடையவர்கள் என்று அந்த வசனம் கூறுகிறது. இப்படிச் சொல்வதில் , நமக்கு ஒரு தர்ம சங்கடம் இருக்கிறது. நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவும் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர் தானே? அப்போ அவரும் பாவியா? என்ற கேள்வி எழுகிறது. அதை சமாளிப்பதற்காக வேறொரு தத்துவத்தைக் கண்டு பிடித்து உள் நுழைக்கின்றனர். அதாவது பாவமற்ற தன்மையில் (Immaculate Conception) கருத்-தரித்தல் என்ற ஒரு புதிய கோட்பாடு உருவாக்கப்பட்டு அதன் பிரகாரம் இயேசுவை ஈன்ற மரியன்னையின் தாயார் பாவமற்ற தன்மையில் கருத்தரித்து ஆதாமின் ஜென்ம பாவத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள் என்கின்றனர். இதன் அடிப்படையில் இயேசுவின் தாயாரும், இயேசுவும் ஆதாமினால் உண்டான ஜென்ம பாவத்துக்கு விலக்கானவர்கள் என்று கூறுகின்றனர் இது ஒருவகையில் இயேசுவின் தாயாரையும் கடவுள் ஸ்தானத்துக்கு உயர்த்தும் மனித முயற்சியேயன்றி வேத ஆதாரம் இல்லாதது. இவ்விதமான பேதகல்கள் எல்லாம் தேவைதானா? என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

இந்த வசனத்தில் ''ஸ்திரீயினிடத்தில் பிறந்த ஒவ்வொரும் பாவியே'' என்று சொன்னது யார்? யோபுவின் நண்பர்களில் ஒருவனான சூகியனான பில்காத். யோபு 42:7-ல் கர்த்தர் பேசுகிறார். உன்மேலும் (தேமானியனாகிய எலிப்பாஸ்) உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது என்கிறார்? ஏன்? என் தாசனாகிய யோபு பேசினதுபோல் நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை. ''நிதானமாய்'' என்று தமிழ் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தை ஆங்கிலத்தில் (Right) அதாவது தவறு இல்லாதது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இந்த மூன்று நண்பர்கள் சொன்ன கருத்துகள் தேவனுடைய கருத்துக்கும், சித்தத்துக்கும் ஏற்றவைகள் அல்ல என்பதையும் அதனால் அவர்கள் தேவ கோபத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதையும் அடுத்த வசனத்தை வாசித்தால் புரிந்து கொள்ளலாம்.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நாம் சிந்திக்கப்போகிற வசனத்துக்குப் போகுமுன்பு யோவான் 9-ஆம் அதிகாரத்தில் பரிசேயர்-கள் அந்தப் பிறவிக் குருடனைப் பார்த்து ''முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்கிற வசனத்தைப் படித்து விட்டு, ஜென்ம பாவம் உண்டுஎன்று தவறாக எண்ணிக்கொள்கின்றனர்,

ஆனால் நன்ருகக் கவனித்துப் பார்த்தால், தங்களையும் சேர்த்து எல்லாரும் பாவத்தில் பிறந்தவர்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. "முழுவதும் பாவத்தில் பிறந்த நீ" என்று பிறவிக் குருடனைத்தான் சுட்டுகிருர்கள். அதாவது உன் குருட்டுத் தனத்துக்கு உன் பாவமே காரணம் என்பது போல் ஏசுகிருர்கள். நமக்குத் தெரிந்திருக்கிற பிரகாரம் பரிசேயர்களுடைய கருத்துக்களை இயேசுகிறிஸ்து பல சந்தர்ப்பங்களில் சாடி அவர்களுடன் முரண்பட்டார் என்பது நாம் அறிந்த உண்மை.

இப்போது ரோமர் 3:23ஐ எடுத்துக்கொள்வோம். "எல்லாரும்" பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி ..... மூன்றும் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பார்த்தால் "எல்லாரும்" என்று பவுல் குறிப்பிடும்போது யூதர்களையும், பிற இனத்தாரையும் சேர்த்தே குறிப்பிடுகிருர் என்பது விளங்கும். மாந்தர் ஒவ்வொருவரும் என்ற பொருளில் அல்ல. மேலும் 5:19-ல் பவுல் ஆதாமின் பாவத்தையும், அது மனுக்குலத்துக்கு விளைவித்த தீங்குகளையும், கிறிஸ்துவின் நீதியையும் அது மனுகுலத்துக்கு ஈந்த நன்மைகளையும் ஒப்பிடும்போது வசனம் பத்தொன்பதின் முடிவில் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தருகிருர். "ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையினுலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல ஒருவருடைய கீழ்ப்படிதலினுலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" இங்கே "அநேகர்" என்பதைக் கவனிக்க. ஒருவருடைய கீழ்படிதலினுலே எவ்வாறு அநேகர் நீதிமான்களாக்கப்பட்டார்கள்? எவ்வாறு ஒரு நபரின் (ஆதாம்) பாவ வழிகளைப் பின்பற்றினவர்கள், பின்பற்றிக்கொண்டிருக்கிற "அநேகர்" பாவிகளாகிருர்களோ அதே போன்று கிறிஸ்து ஒருவருடைய கீழ்ப்படிதலே ஏற்றுத் தாங்களும் கீழ்ப்படிதலின் பிள்ளைகளாகும்போது "அநேகர்" நீதிமான்களாக்கப்படுகிருர்கள். ஆதாமின் பாவத்தினுல் எல்லோரும் பாவிகள் என்று சாதிக்க நாம் முற்பட்டால், கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினுலே எல்லாரும் நீதிமான்களாக்கப்பட வேண்டுமே! ஆனுல் அப்படி எல்லாரும் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிருர்களா? இல்லையே.

எசேக்கியேல் தீர்க்கதரிசி, அவனவன் பாவத்துக்கு அவனவன் தான் பொறுப்பு; மற்றவர்களுடைய பாவத்துக்கு அல்ல என்று தெளிவாகக் கூறுகிருர்". பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும் குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. நீதிமானுடைய நீதி அவன்மேல்தானிருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் தானிருக்கும் 18 : 20 தான் செய்கிற பாவத்துக்குத்தானே பொறுப்பு என்கிற கோட்பாடு மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் கூடக் காணப்படுகிறது. உபா. 24 : 16.

இயேசுவினிடத்தில் கொண்டு வரப்பட்ட குழந்தைகளைத் தடுத்த பொழுது இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கூறிய புத்திமதியென்ன?

"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள் அவர்களைத் தடை பண்ணுதிருங்கள் பரலோக இராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது. என்றார் இந்தச் சம்பவங்களைத் தொகுத்துத் தந்த மாற்கும், லூக்காவும் தொடர்ந்து இயேசு கீழ்க்கண்டவாறு உரைக்கிறார் என்று எழுதுகின்றனர். "எவனுகிலும் சிறு பிள்ளையைப்போல தேவனுடைய இராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பது இல்லை" என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மாற்கு 10:15; லூக்கா 18:17.

ஜென்ம பாவக் கொள்கையாளர்கள் பச்சிளங்குழந்தைகளையும் கூசாமல் பாவிகள் என்று முத்திரை குத்துவதற்கு முன், பாவம் என்றால் என்ன? என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளப் பிரயாசப்படுவோம். பாவம் என்றால் என்ன? என்பதற்குப் புதிய ஏற்பாடு தரும் நான்கு விளக்கங்களைக் கவனமாய் ஆராய்வோம்.

1. விசுவாசத்தால் வராத யாவும் பாவமே. ரோமர் 14 23 (சந்தேகப்படுதல், மனசாட்சிக்கு விரோதமாக செயல்படுதல் ஆகியவைகள் இந்த ரகத்தைச் சேர்ந்த பாவங்கள்.)

2. நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமல் இருப்பது யாக் 4:17.

3. நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் 1 யோ 3:4. (செய்யக்கூடாது என்று வேதாகமம் கூறுகிறதை மனப்பூர்வமாய் மீறிச் செய்தல்)

4. அநீதியெல்லாம் பாவந்தான் 1 யோ 5:17
இப்பொழுது ஒரு கேள்வி?

புதிதாகப் பிறந்த ஒரு குழந்தை மேற்சொன்ன பாவங்களில் எந்த ரகப் பாவத்தை மீறுகிறது? எதையும் இல்லைதானே!

மேலும் வேதாகமத்தில் பாவங்கள் என்று சொல்லப்படுபவைகளை இரண்டு வகைகளில் அடக்கி விடலாம். 1. செய்யத்தகாதவைகளைச் செய்தல். 2. செய்யத்தக்கவைகளைச் செய்யாமல் விடுதல். அதாவது நம்முடைய செயல், சொல், நினைவுகளால் பாவம் செய்தல் இன்னொன்று செயல், சொல், நினைவுகளால் நாம் செய்யவேண்டும் என்றிருக்கிறவைகளை செய்யாமல் விட்டுவிடுவது இந்த இரண்டு வகையிலுமே குழந்தைகள் பாவம் செய்வதற்கு வாய்ப்பில்லை. இருப்பினும் ஜென்ம பாவம் என்று சிலர் மக்களைப் பயப்படுத்திக் குழப்பத்தில் ஆழ்த்தி தாங்களும் மோசம் போகின்றனர்.

இந்த ஜென்ம பாவம் உண்டு என்ற கொள்கையை ஏற்றுக் கொள்வதினால் சமுதாயத்துக்கும், மார்க்கத்துக்கும் ஏற்படுகிற தீங்குகளைக் கவனிப்போம்.

1. குழந்தை ஞானஸ்நானம் என்று வேத ஆதாரமற்ற சடங்கை செய்து தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அவமதிக்கிறார்கள்.

2. தேவனால் ஏற்படுத்தப்பட்ட தெய்வீகத் திருமணத்தை மாசுபடுத்தி குழந்தை பெற்றுக்கொள்வதே பாவச் செயல் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. அப்படியானால் தாம்பத்ய உறவே கூடத் தகாது என்கிறதே! ஆனால் வேதாகமம் அப்படிக் கூறவில்லை. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது. எபி 13:4. வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம். 1 கொரி 7:9.

வேத பண்டிதர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் செய்கிற தவறான வியாக்கியானத்தால் அநேகர் தாங்கள் பெற்ற குழந்தைகளை அன்புடன் நேசித்து வளர்ப்பதற்குப் பதிலாக அவைகளைப் பாவத்தின் சின்னங்கள் என்று வெறுத்து ஒதுக்கும் கேவலமான நிலைக்குப் போய் விடுகின்றனர். அந்தோ பரிதாபம்!

எல்லாம் அறிந்த இயேசு, குழந்தைகளை நேசித்து அவர்கள் பரலோக இராஜ்ஜியத்துக்குத் தகுதியுள்ளவர்கள் என்று நற்சான்றிதழ் வழங்கிய பிறகு, நீங்களும் நானும் அவர்களைப் "பாவிகள்" என்று முத்திரை குத்தி வெறுத்து ஒதுக்கலாமா?

சத்தியத்தையும் அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும். யோவான் 8:32.

ஜீசல்: டி. பெய்லி

# மெய்யும் பொய்யும்

மெய்க்கும் பொய்க்கும் எவ்வளவு வித்தியாசம்?
தேவனுக்கும் பிசாசுக்குமுள்ள அவ்வளவு வித்தியாசம்!
செய்வதற்கும், செய்யாமைக்கும் எவ்வளவு வித்தியாசம்?
கீழ்ப்படிதலுக்கும், கீழ்ப்படியாமைக்கும் உள்ள அவ்வளவு வித்தியாசம்!
நீதிக்கும் அநீதிக்கும் எவ்வளவு வித்தியாசம்?
பரிசுத்தத்திற்கும், பாவத்துக்குமுள்ள வித்தியாசம்!
புதிய உடன்படிக்கைக்கும், பழைய உடன்படிக்கைக்கும் எவ்வளவு வித்தியாசம்?
ஜீவனுக்கும் சாவுக்குமுள்ள அவ்வளவு வித்தியாசம்!
முழுகுதலுக்கும், தெளிப்புக்கும் எவ்வளவு வித்தியாசம்?
தாழ்மைக்கும் பெருமைக்கும் உள்ள அவ்வளவு வித்தியாசம்!
கிறிஸ்துவின் சபைக்கும் ஏனைய கூட்டங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்?
மோட்சத்திற்கும் நரகத்துக்குமுள்ள அவ்வளவு வித்தியாசம்!

செப்படவ ஞானி

# புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம்

''ஞானஸ்நானம்'' என்பது ஒரு வேதாகமபாடம். வேதாகமம் இல்லை என்றால் அப்படிப்பட்ட ஒரு செயலைப்பற்றி நாம் அறிந்திருக்க முடியாது. அதாவது, தேவனே இதை ஆக்கியோன்; தம்முடைய வார்த்தையின் மூலம் இதை வெளிப்படுத்தி இருக்கிறார் என்று பொருள். ஆகையினால் இதைப் பற்றிய உண்மையை தெரிந்து கொள்ள முயல்வோம்.

*1.* ஒரே ஞானஸ்நானம் :- பவுல் கூறுகிறார், ''ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் (எபேசியர் 4:5). இதற்குமுன் அநேக ஞானஸ்நானங்கள் இருந்திருக்கலாம். ஆனால் கி.பி. 64 அல்லது 65-ல் தேவாவியினால் ஏவப்பட்டுப் பேசிய தேவனுடைய மனுஷன் ஒரே ஞானஸ்நானம்தான் இப்போது இருக்கிறது என்று வெளிப்படுத்துகிறார். அந்த ஒரே ஞானஸ்நானத்தோடு, மனிதன் மற்றவைகளை கூட்டி இருக்கிறான். இது வேதவசனத்திற்கு முற்றிலும் முரண்பாடானது.

2. ஞானஸ்நானம் என்றால் என்ன? :- ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்'' என்றார் பவுல் (கொலோசெயர் 2:12). ''கிறிஸ்து இயேசுவுக்கு உள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் என்றார் (ரோமர் 6:3,4). அப்படியானால் ஞானஸ்நானம் என்பது ஒரு அடக்கம் பண்ணப்படுதலாகும். தெளித்தல், ஊற்றுதல் போன்ற முறைகள் உண்மையிலே ஞானஸ்நானமாகாது.

3. ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணுதல்:- ஞானஸ்நானம் நீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்று அப்போஸ்தலர் 8-ம் அதிகாரம் போதிக்கிறது. எத்தியோப்பிய மந்திரி குணப்பட்ட சம்பவத்தில் கூறப்பட்டிருப்பது, இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீர்

உள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி, இரதத்தை நிறுத்தச் சொல்லி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்தான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன்வழியே போனான்.'' (அப்போஸ்தலர் 8:36-39).

4. ஞானஸ்நானம், பாவமன்னிப்புக்கென்று :- பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கு என்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்போஸ்தலர் 2:38). அப்போஸ்தலர் 22:16ஐயும் வாசிக்கவும்.

5. ஞானஸ்நானம் இரட்சிக்கிறது :- கிறிஸ்து கூறினார், விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்கு 16:16) அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்சஅழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாய் இருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்து எழுதலினால் இரட்சிக்கிறது'' (1 பேதுரு 3:21). ஞானஸ்நானம் எப்பொழுது ஒருவனை இரட்சிக்கும்? ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களை விட்டு மனந்திரும்பி அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, அவர் கட்டளையிட்டபடி ஞானஸ்நானம் பெறும் பொழுதுதான் இரட்சிக்கும். (அப்போஸ்தலர் 10:48).

6. ஞானஸ்நானம், ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது :- ''நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், கிறிஸ்துவுக்கு உள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே'' (கலாத்தியர் 3:26, 27). மேலும் ரோமர் 6:3,4-ம் படிக்கவும்.

7. ஞானஸ்நானம் ஒருவனை சபைக்குள்ளாக இணைக்கிறது:- ''நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்'' (கொலோசெயர் 1:18; எபேசியர் 1:22,23).

# நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? அப் 16:30

நன்மை தீமையை அறிந்த ஒவ்வொரு மனிதனும் மரணத்திற்கு முன்னால் கேட்கவேண்டிய மிகமுக்கியமான கேள்வி இது. ரோம 2:15

மனிதன் தான் முற்றிலும் தேவனை விட்டு பாவத்தினால் பிரிக்கப்பட்டபொழுது கேட்கவேண்டிய கேள்வி இது ஏசா 59:2.

ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்து வெளியே அனுப்பப்பட்ட ஆதாம் முதல் யாவரும் கேட்கவேண்டிய கேள்வி இது. ரோம் 3:23.

இந்த சரீரவாழ்க்கையில் காலங்கடந்து வருத்தம், வியாதி, மூப்பு அடைந்து சாவினை நோக்கியிருக்கும் சகல மனிதரும் கேட்க வேண்டிய கேள்வி இது. ரோம 7:24.

இஸ்ரவேலர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் அனுதினமும் தாங்கள் பாவம் செய்தபோது ஆசாரியர்களிடம் பரிகாரமாக நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

---

(26-ஆம் பக்கத் தொடர்ச்சி)

8. ஞானஸ்நானம், புதிய பிறப்பை உண்டாக்குகிறது:- “இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” (யோவான் 3:5)

9. ஞானஸ்நானத்தில், ஒருவன் இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம். உயிர்த்தெழுதலைப் படம்பிடித்துக்காட்டுகிறான். ரோமர் 6-ம் அதிகாரத்தைப் படிக்கவும்.

மேற்கூறிய வசனங்களையும் இன்னும் அநேக வசனங்களையும் வைத்துக்கொண்டு, ஞானஸ்நானம், இரட்சிப்பிற்கு இன்றியமையாதது என்று தெளிவாகக் காட்டமுடியும். கர்த்தருடைய கட்டளைப் பிரகாரம் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா? இல்லையெனில் நீங்கள் அவசியம் தேவனுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து வேதம் கூறுகிறபடி ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்படையுங்கள்.

ஜே. சி. சோட்

ஆனால் பலிகளினாலோ அல்லது மோசேயின் நியாயப் பிரமாணத்தினாலோ மனிதனின் பாவம் நீக்கப்படாமல் போனபோது எபி 9:12. ஏற்ற காலத்தில் தம்து அன்பின் குமாரனை வேதவாக்கியங்களின்படி இவ்வுலகத்திற்கு அனுப்பினார். கலா 3:11. மெய்யாகவே, இவர் நமது துக்கங்களை ஏற்று நமது பாவங்களை சிலுவையிலே சுமந்தார். 1 கொரி 5:21. மூன்று ஆணிகளில் பெரிய மரணகாயம் அடைந்தவராக சிலுவையில் சுமார் ஆறுமணி நேரம் தொங்கினார். அப்பொழுது அவருடைய உடலிலிருந்து தண்ணீரும் இரத்தமும் முற்றிலும் வெளியாயிற்று! யோவா 19:34. அந்தோ . அவர் உனக்காகத் தான்மரித்தார். ஏசா 53:6-8,1 பேது 2:24.

பின்பு அவர் புதியகல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். யோவா 19:41-42 மூன்றும் நாளில் வேதவாக்கியங்களின்படி தேவன் அவருடைய மரண கட்டுகளை அவிழ்த்து உயிரோடே எழுப்பினர். அப் 2:24. இதனால் இவரே மனுக்குலத்தை உயிர்ப்பிக்க வந்த தேவனுடைய குமாரன் என பலமாய் ரூபிக்கப்பட்டார். ரோம 1:5 இந்த இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பூரயானால் நீ இரட்சிக்கப்பட முடியும்! அப் 16:31

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என விசுவாசித்த யூதர்கள் நாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என அப்போஸ்தலரிடம் கேட்டார்கள். அப் 2:37

பேதுரு அவர்களை நோக்கி மனம்திரும்பி ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் பாவமன்னிப்புக்கென்று ஞான ஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தையும் பெற்றுக்கொள்வீர்கள் என்றான். அப் 2:38

அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினமே சுமார் 3000 பேர்கள் இரட்சிக்கப்பட்டவர்களோடு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப் 2-41

அப்போஸ்தலர் நடபடிகளின்படி சுவிசேஷத்தைக் கேட்ட ஒருவன் தேவனுக்கு எப்படிக் கீழ்ப்படிவது என்பதை அறிந்து கிறிஸ்தவனாகி சரீரமாகிய சபைக்குள் சேர்க்கப் படுகிறான். அப் 2:41. பின்னர் தன்னுடைய சரீர மரணமோ அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோ எது முதலில் சம்பவிக்கிறதோ அது வரைக்கும் ஆவிக்குரிய வளர்ச்சி அடைவதற்கு ஞானப்பாலாகிய திருவசனத்தின் மேல் வாஞ்சையாய் இருத்தல் வேண்டும் 1 பேது 2-3 அதைப்பற்றி பல்வேறு காலகட்டங்களில் 21 நிருபங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. வளரும் தேவனுடைய பிள்ளைகளுக்கு இவைகளே உபதேசங்கள், போதனைகள், ஆறுதல்கள், ஆரோக்கியமான உபதேசங்கள் 2 தீமோ 3:16, 17. இவைகளைப் பகுத்துப்படிப்பதினால் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும். முயன்று இரட்சிப்படையுங்கள்

பீட்டர் சாலமோன்.

## கிறிஸ்துவின் சபை கூடும் இடம் :-

1. இத்திரா நகர், வெள்ளகோவில், பெரியார் மாவட்டம்.
2. அரங்கபாளையம், சின்னத்தாராபுரம் வழி.
   கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்
3. K. A செங்கோட்டையா காலனி,
   மொடச்சூர் அஞ்சல், கோபி வட்டம், பெரியார் மாவட்டம்
4. மவுண்ட் சீயோன்,
   K பாலடா அஞ்சல், கேத்தி வழி, நீலகிரி மாவட்டம்.
5. Y. W. C. A. விளாகம்,
   ஆனந்தகிரி, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.
6. 47/1, லங்கக்கரா தெரு, திருவள்ளூர்-602 001.
7. எண். 53, ஸ்கூல் ரோடு,
   சேத்துப்பேட்டை, சென்னை-600 031.
8. 14-F/43, கல்லூரி சாலை, திருப்பூர்-638 601.
9. M. வாடிப்பட்டி அஞ்சல், அண்ணா மாவட்டம்-624 411.
10. அந்தோணியார் தெரு, சேலம்-5.
11. வர்க்கீஸ் காம்பவுண்டு,
    மவுண்ட் பிளசண்ட் சாலை, குன்னூர்-643 102.
12. தோபிகா, நடக்காரப்போ, கள்ளிக்கோட்டை-673 011.
    கேரளா மாநிலம்.
13. Y. W. C. A. விளாகம்,
    ராயப்பேட்டை, சென்னை-600 014.
14. சமுத்திரம்,
    சின்னப்பம்பட்டி அஞ்சல், சேலம் மாவட்டம்.
15. ஆவணிப்பேரூர் கிழக்கு,
    போடிநாய்க்கன்பட்டி அஞ்சல், வெள்ளாண்டிவலசு வழி,
    சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.

# வாசக அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

விலாசங்கள் கொடுத்தவர்களுக்கு ஜனவரி மாத இதழ் வந்து சேர்ந்திராவிட்டாலும், ஒன்றுக்கு அதிகமான இதழ்கள் வந்து கொண்டிருந்தாலும் தயவு கூர்ந்து எங்களுக்குத் தெரிவியுங்கள். கிடைக்காதவர்களுக்கு பிப்ரவரி மாத இதழுடன் சேர்த்து அனுப்புகிறோம். மாதா மாதம் 20-ம் நாளில் அனுப்புகிறோம். பிரதி மாதம் 25-ம் தேதிக்குள் வராவிட்டால் தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள்; ஆவன செய்வோம்.

ஆசிரியர்

Edited by E. Z. Selvanayagam and Published by
Sri. Vela E. V. Arasamanickam, at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER

TO

BOOK-POST

If undelivered please return to ;
The Editor
THIRUMARAI AASAAN,
2, Manal Medu Street,
ERODE-638 002.